மாணவர்களின் மத்தியில் சொல்லியிருந்தால் அவர்கள் ஏற்றுக்கொண்டிருப்பார்கள். அதைச் சொல்லியிருக்கிறார்களோ என்னவோ அதைப் பற்றி தகவல் இல்லை. குறைவு ஏற்பட்டிருக்கிறது. அதற்குண்டான காரணங்களை விரிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அரைப்பட்டினி அல்லது வயிற்றுக்கு போதுமான அளவிற்கு சோறு போடமுடியாதிருக்கிற விடுதிகளை, அந்த நிலையை அரசு ஏற்றுக்கொள்ளாது. குறைபாடுகள் இருந்தால் அந்த விடுதிகளை அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டுமெனகிற எண்ணத்தில் ஏறத்தாழ 20 விடுதிகளை, தனியார் நடத்துகிற விடுதிகளை எல்லாம் அரசு எடுத்துக்கொள்ளவேண்டுமென்ற முடிவு எடுத்து அப்படி எடுத்துக் கொள்ளும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறோம். அரசாங்க மானியம் பெற்றும் ஹரிஜன, பின் தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு குறைவாகப் போடப்பட்டிருக்கிறது என்பதை அரசாங்கம நிச்சயமாக பார்த்துக் கொண்டிருக்காது.

6. அறிக்கைகள் அளித்தல்

(அ) 1966–67-ம் ஆண்டுக்கான தமிழ்நாடு கணக்குகளின் மீதான பொதுக்கணக்காய்வுக் குழுவின் அறிக்கை

THIRU P. G. KARUTHIRUMAN : Sir, I rise to present the report of the Public Accounts Committee on the accounts of the State of Tamil Nadu for 1966–67. I place it on the table of the House.

(ஆ) அரசினர் உறுதிமொழிக் குழுவின் அறிக்கை.

THIRU K. VINAYAKAM : Sir, I have the honour to present the Fifth Report of the Committee on Government Assurances for the year 1969–70.

7. 1970–71-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி

நிதிக்கோரிக்கை எண் 24—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை எண் 24—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர் என்ற தலைப்பின்கீழ் ரூ. 81,49,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

DR. H. V. HANDE : To discuss the ways and means to enable the labourers to take part in the management, I move the following cut motion :—

"That the allotment of Rs. 81,49,800 under Demand No. 24—Labour including Factories be reduced by Rs. 100.".

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, தொழிற்சாலைகளில் தற்காலிகப் பணியாளர்களாக ஒரு வருடம் வேலை பார்த்தவுடன் நிரந்தரப் பணியாளர்களாக்கப்பட வேண்டுமென்று விவாதிக்க "நிதிக் கோரிக்கை எண் 24—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 81,49,800-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்றவெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.